# விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு

# இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## வெற்றிடமாகவுள்ள பதவி நிலைகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல்

விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுவதும் 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுமான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, தேசத்தின் புத்தாக்க திறன்களை மேம்படுத்துவதற்கு பொறுப்பான பிரதான அமைப்பாகும். ஆணைக்குழுவானது, தற்போது ஒரு ஆணையாளர் மற்றும் இரண்டு உதவி ஆணையார்களின் கீழ் செயற்படுகிறது.

ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவி நிலைளை நிரப்புவதற்கு தகைமை உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**உதவி பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர் (நிதி) (பதவி வெற்றிடம் 01)- ஒப்பந்த அடிப்படையில்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

வணிகம்/நிதி/கணக்கியல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் .

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர், குறித்த பதவிக்குப் பொருத்தமான துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட பணி அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**பதவிக்கு ஒப்படைக்கப்படும் பணிகள்:**

நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை வழிநடத்துதல்

**சம்பள அளவுத்திட்டம்:**
MM 1 – 2- 2025 – ரூபாய் . 94,170 – 10 x 2,480 – 15 x 3450 – රු. 170,720

**ஏனைய அனுகூலங்கள்:**

ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படும்.

**வயதெல்லை** -

22-45 வயதெல்லைக்குள் இருத்தல் வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஆராய்ச்சி உதவியாளர் (பதவி வெற்றிடம் 01 ) - ஒப்பந்த அடிப்படையில்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்** -

பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்

விஞ்ஞானம் / முகாமைத்துவம் / சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் பட்டப்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் .

.

**பதவிக்கு ஒப்படைக்கப்படும் பணிகள்:**

* **கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடிப்பாளர்களையும் அங்கீகரித்தல்.**
* **கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் .**
* **பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஏற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.**
* **புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கு உதவுதல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் .**
* **தகவல்கள் மற்றும் தரவுகளைச் சேகரித்தல், அவற்றைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.**

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 3 – 2025 – ரூபாய் . 53, 940, - 10 x 800 -11 x 1190 - 10x1320- 5x1350 - ரூபாய் . 94,980

**ஏனைய அனுகூலங்கள்:**

ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படும்.

**வயதெல்லை** -

22-45 வயதெல்லைக்குள் இருத்தல் வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**தொழில் நுட்ப வகுதி சாராத முகாமைத்துவ உதவியாளர்( பதவி வெற்றிடம் -02)- ஒப்பந்த அடிப்படையில்**

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

-

(அ ) கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வில்**,**

**i.** சிங்களம் / தமிழ்
**ii.** கணிதம்
**iii.** ஆங்கில மொழி

மேற்குறிப்பிட்ட பாடங்கள் உள்ளடங்கலாக **,** ஒரே தடவையில் குறைந்தபட்சம் ஆறு (**06)** பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் **,** அவற்றில் நான்கு (**04)** பாடங்களில் திறமைச் சித்தி (**Credit Pass)** பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ ) கல்விப் பொதுத் தராதர உயர்தர தர தேர்வில் குறைந்தது மூன்று (03) பாடங்களில் (பொதுப் உளச்சார்பு தவிர்த்து) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**பதவிக்கு ஒப்படைக்கப்படும் பணிகள்:**

நிறைவேற்று மற்றும் முகாமைத்துவப் பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு உறுதுணையாக அமையும் வகையில், எழுத்தர் மற்றும் கணக்கியல் பணிகளை மேற்கொள்ளுதல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 1 – 1- 2025 - Rs. 46,220 – 10 x 540 – 7 x 630 – 4 x 890 – 20x 1190- Rs. 83,390

**ஏனைய அனுகூலங்கள்:**

ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படும்.

**வயதெல்லை** -

22-45 வயதெல்லைக்குள் இருத்தல் வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

**நேர்முகத் தேர்விற்கான புள்ளிகள் வழங்கும் முறை**: தொடர்புடைய மேலதிக கல்வித் தகைமைகள், தொடர்புடைய பணி அனுபவம், தொழில்சார் திறமைகள்/பிற தகைமைகள் மற்றும் நேர்முகத் தேர்வின்போது வெளிப்படுத்தப்படும் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்

விண்ணப்பதாரரால் தயாரிக்கப்பட்ட சுயவிபரத் தகவல்களுடன் கூடிய விண்ணப்பங்கள் **2026.10.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.அரசுத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது சட்டரீதியான நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஆணையாளர் ,**
**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு,**
05 **ஆம் மாடி ,**
“**மெஹேவரபியச** ” **கட்டிடம்** ,
**கொழும்பு -0**5.
www.slic.gov.lk
011-2676645